<u>சாட்சிகளின் வாக்குமூலம்</u>
பாகம் III சுற்றறிக்கை உத்தரவு 2 (I) உ.வி.மு.ச.
பிரிவு 1 மற்றும் உ.வி.மு.ச.
**அ.வ.எண். 22/2015**
<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்</u>
<u>வாக்குமூலம் – வா.சா.2</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நல்லசாமி | மதம் | : | |
| த/க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலுகா | : | | நாள் | : | 16.04.2026 |

1987 ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 10 ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு 2026 ஆண்டு ஏப்ரல் 14 ம் நாள் சாட்சியம்.

---

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் சமர்ப்பித்துள்ள ஆதார் அட்டையில் நான் மூலனூரில் வசிப்பதாக உள்ளது என்றால் சரிதான். சுள்ளப்பெருக்கிபாளையத்தில் நான் இருந்ததற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். புல எண்.212 மற்றும் புல எண்.213 தொடர்பான ஆவணங்கள் எதுவும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. பொங்கியாத்தாள் என்பவர் பூமியில் தடம் இருப்பதாக இந்த வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தடம் இருக்கும் பூமியின் சர்வே எண் எனக்குத் தெரியாது. இந்த வாதியின் பூமிக்குறிய சர்வே எண்.213 ஆகும். சென்னித்துரை என்பவருக்கு வாதியின் பூமிக்கு தென்புறமாக பூமி உள்ளது. சென்னித்துரை என்பவரின் பூமிக்கு கிழபுறம் தென்வடல் இட்டேரி அமைந்துள்ளது என்றால் சரிதான். அந்த இட்டேரி தற்போது சுமார் 30 அடியில் தார்ரோடாக அமைந்துள்ளது. அந்த தார் ரோடு வரை சென்னித்துரை பூமி உள்ளது என்றால் சரிதான். அந்த தார் ரோடு வரை வாதியான சென்னிமலைகவுண்டரின் பூமி இருந்தது என்றால் சரிதான். தார் ரோட்டினை ஒட்டிய பகுதியை சென்னிமலைக்கவுண்டர் சுமார் 20 வருடங்களுக்கு முன்பு விற்பனை

செய்து விட்டார் என்றால் சரிதான். விற்பனை செய்த போது தடத்தை நிறுத்தி வைத்தாரா என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது.

2. வாதி மற்றும் பிரதிவாதிகளின் சொத்துக்கள் தனித்தனி குடும்பத்தாரிடம் இருந்து என்றால் சரிதான். வாதிக்கு பாத்தியப்பட்ட ரோட்டின் மீது அமைந்திருந்த பூமியை விற்பனை செய்து விட்டு தற்போது பிரதிவாதிகளின் பூமியில் தடம் இருப்பதாக இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வாதியின் தென்புற பாகஸ்தர்கள் கிழபுறம் உள்ள ரோட்டினை பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளின் பூமியை தடத்திற்கான உரிமை பாத்தியம் எதுவும் வாதிக்கு இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் பெண்கள் என்பதால் மிரட்டி தடம் அமைப்பதற்காக இந்த வழக்கினை வாதி தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எனக்கு தாவா சொத்திற்கு அருகில் பூமி உள்ளதாக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. வாதிக்கு ஆதரவாக வாதி சொல்லிக் கொடுத்ததின் அடிப்படையில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை முடிவடைந்தது</u>**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

/ஒம் /**R**.பாண்டி மகாராஜா,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தாராபுரம்.